# தசை சிதைவு நோய் விழிப்புணர்வு

கோவையில் சர்வதேச தசை சிதைவு நோய் விழிப்புணர்வு தின நிகழ்ச்சி நடைபெற்றது. கோவை மரபணு பரிசோதனை, கலந்தாய்வு, ஆராய்ச்சி அமைப்பு சார்பில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட 50-க்கும் மேற்பட்ட குழந்தைகள் பங்கேற்றனர்.

கோவை அரசு மருத்துவக் கல்லூரி டீன் பி.அசோகன், ராயல் கேர் சிறப்பு மருத்துவமனை தலைவர் மாதேஸ்வரன், முனைவர் பி.ஆர்.லட்சுமி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சியில் பேசியவர்கள், 'உலகம் முழுவதும் 3500 குழந்தைகளில் ஒரு ஆண் குழந்தைக்கு தசை சிதைவு நோய் ஏற்படுகிறது. மரபு சார்ந்து, ஆண் குழந்தைகளை மட்டும் தாக்கும் இந்த நோய்க்கு இதுவரை மருந்து கண்டறியப்படவில்லை' என்றனர். தொடர்ந்து, தசை சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அவர்கள், பட்டங்களையும், பலூன்களையும் பறக்கவிட்டும் மகிழ்ந்தனர்.